**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 158/2022**

**வா.சா.2 – கதிர்வேல்**

**<u>25–09–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாக குறுக்கு விசாரணை செய்கிறார்</u>**

1. கார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. கார் 2021 ல் இருந்து அந்த இடத்தில் நிர்கிறது. 2012 ல் இருந்து அந்த இடத்தில் கார் நிர்கிறது என்றால் சரியல்ல. 2012 ற்கு முன்பு அதே இடத்தில் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான வேறு ஒரு கார் நின்றது என்றால் சரியல்ல. வழக்கு தொடங்குவதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 03.06.2022 ல் அனுப்பினேன். அதற்கான ஒப்புதல் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது.

2. எனது இடத்தை அளப்பதற்கு 22.08.2022 ல் வட்டாச்சியருக்கு மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு மனு கொடுத்தும் வட்டாச்சியர் அளக்கவில்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 22.04.2022 ல் காலை 11.00 மணிக்கு நில அளவையர் அளப்பதாக நான் அருகே உள்ள உரிமையாளர்களிடம் அறிப்பு கொடுத்தேன் என்றால் அறிப்பு கொடுத்தேன் ஆனால் அளக்கவரவில்லை. 03.06.2022 ல் யாருக்கு அறிப்பு கொடுக்காமல் எனது வீட்டை அளந்தார்கள் என்றால் முதலில் கொடுத்த மனுப்படி அளந்தார்கள். அளந்துவிட்டதால் நான் தற்போது அளக்கவில்லை என்று சொல்வது பொய் என்றால் 22.04.2022 ல் அளக்கவில்லை, 03.06.2022 ல் அளந்துவிட்டார்கள்.

3. 22.04.2022 ல் அனைவருக்கும் அறிப்பு கொடுத்து அனைவரும் ஆவணத்துடன் காத்திருக்கும்போது அன்று எனது செல்வாக்கை பயன்படுத்தி அளக்கவிடாமல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. 03.06.2022 ல் யாருக்கும் அறிப்பு கொடுக்காமல் எனது இடத்தை மட்டும் அளந்துள்ளார்கள் என்றால் நான் ஏற்கனவே கொடுத்த அறிவிப்பிற்கு அளந்தார்கள். நில அளவையரை கேட்டபோது எதிர் தரப்பு ஆட்சேபணை செய்தார். ஆட்சேபணை செய்தது குறித்து என்னிடம் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. 03.06.2022 ல் பிரதிவாதிகள் இல்லாமல் அளந்து முடிந்த சமயத்தில் அவர்கள் அங்கு வந்து தடுத்தார்கள் என்றால் சரியல்ல, மூவரும் இருந்தார்கள் தடுக்கவில்லை.

4. அவர்கள் தடுத்தபோது நில அளவையர் வட்டாச்சியரிடம் கேட்கசொன்னார் என்றால் சரியல்ல. அளப்பதை தடுத்தபோது பட்டா உரிமை ஆவணம் இல்லை என்றும், அது ஒரு ஆணை என்று நில அளவையர் என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. என்னுடைய பூமியை எனது சகோதரர் தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தானசெட்டில்மெண்ட் ஆவண எண். 4421/2017 எனது தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். அதில் தாவா சொத்து நாச்சிமுத்து கவுண்டர் தடம் என்று உள்ளது என்றால் சரியல்ல. நாச்சிமுத்து கவுண்டர் வீட்டிற்கு போகும் தடம் என்று தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் எனது பத்திரத்தில் நாச்சிமுத்து கவுண்டர் தடத்திற்கும் தென்வடல் தடத்திற்கும் மேற்கு என்று தான் உள்ளது என்றால் அது நாச்சிமுத்து கவுண்டர் வீட்டிற்கு போகும் பொது வழித்தடம்.

5. பொது வழித்தடம் என்று எனது தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். ஆனால் அது பொது வழித்தடம்தான். தாவா தடத்தை விட்டால் வேறு தடம் இல்லை என்று நான் பொய் சொல்கிறேன்

என்றால் சரியல்ல. எனது தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 9 வது பக்கத்தில் எனது வீட்டிற்கு மேற்புறத்தில் உள்ள தென்வடல் கிழமேல் தடத்தில் இட்டேரிவரை தாங்களும், சுக்கிரசெட்டியார். கந்தசாமி செட்டியார் நடந்துகொள்ள பாத்தியம் என்று உள்ளது என்றால் சரிதான். தாவா தடம் எண். 736/8 ல் சென்றுதான் எண்.736/7 ற்கு செல்ல முடியும், எண்.736/9 ல் உள்ளது நேர் வழி. எனது வீட்டிற்கு கிழக்கேதான் எண்.736/8 மற்றும் 736/9 அமைந்துள்ளது என்றால் எண.736/9 மட்டும் தான் உள்ளது. எனது வீட்டிற்கு முன்புறம் எண். 736/8 உள்ளது. எண். 736/8 கிழக்கே தான் உள்ளது என்றும், நான் பொய்யாக வீட்டிற்கு முன்பு எண். 736/9 உள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு வடக்கே 736/8 உள்ளது. வீட்டிற்கு மேற்கே உள்ள காலை எண் என்ன என்றால் 736/7 தடம்.

6. 736/7 ல் தான் எனது சகோதரர் எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் மூவருக்கும் தடம் உள்ளது என்றால் 736/9 ல் நாங்கள் சொத்தை பராமரிப்பதற்கு பொது தடம், அது தான் சொத்திற்கு மேய்ன் வழி. அவ்வாறு எனது ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை, ஆனால் அதேதான் பல காலமாக பயன்படுத்திவருகிறோம். 736/6 என்று எனது சகோதரர் தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2022 வரை நத்தம் ரீ சர்வே செய்யப்பட்டது யாருக்கும் தெரியாது என்றும், அவரவர் ஆவணத்தின் படி இருந்தார்கள் என்றால் சரியல்ல. 2017 ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுத்தப்பட்டபோது நத்தம் சர்வே பற்றி தெரியும் என்றால் அப்போது தெரியாது, இடையூறு செய்யும்போது தான் தெரியும்.

7. 2022 ல் தான் நத்தம் ரீ சர்வே பட்டா பற்றி அங்கு உள்ள மக்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. அப்போது எனக்கு ரீ சர்வே பற்றி முதலில் தெரியும் என்றால் சரிதான். தெரிந்தும் நான் ஏன் எனது ஆவணத்தில் சொல்லவில்லை

என்றால் பழைய ஆவணத்தில் இருந்ததை தான செட்டில்மெண்டிலும் குறிப்பிட்டேம். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 பட்டா எண். 1837 என்னுடையதுதான் அதில் எங்கள் குடுப்பத்திற்கு 60 சதுர மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளதாலும் ஆனால் வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 114 சதுரடிக்கு அதிகமாக எழுதியதால் தான் பட்டாவை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1228 சதுரடி பூமிக்கு ஆவணத்தில் இருந்ததால் அதன் படி எழுதப்பட்டுள்ளது. 1993 கிரைய ஆவணப்படி தான் நாங்கள் பத்திரம் பன்னியுள்ளோம் என்றால் சரிதான். கிரைய ஆவணத்தில் அளவு அதிகமாக இருப்பதாலும் பட்டாவில் குறைவாக இருப்பதாலும் கிரைய ஆவணத்தின் அளவை தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் போட்டு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுறிது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.